FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM I

C 8213076

1 District மாவட்டம்: தென்காசி | காவல் நிலையம்: ... | Year ஆண்டு: 2024 | FIR No முதல் தகவல் அறிக்கை எண்: 07/2024 | Date நாள்: 13.06.2024

2 (i) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

(ii) Act சட்டம்: PC Act 1988 (as amended in) Act 16 of 2018 | Sections பிரிவுகள்: 7(a) r/w

(iii) Act சட்டம்: CrPC | Sections பிரிவுகள்: 102 Cr.PC

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும்:

3 (a) Occurrence of Offence Day: குற்ற நிகழ்வு நாள் | Date from: நாள் முதல் 12.06.2024 | Date to: நாள் வரை

Time Period: நேர அளவு | Time from: நேரம் முதல் 10.00 hrs | Time to: நேரம் வரை 18.40 hrs

(b) Information Received at PS. Date: காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 13.06.2024 | Time: நேரம் 02.00 hrs

(c) General Diary Reference: Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time: நேரம்

4 Type of Information: Written/ Oral:
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்துமூலமாக

5 Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — Sub Registrar office, Kadayam. 20 Km South East.

Beat Number: முறைக் காவல் எண் | (b) Address: முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S: | District:
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | மாவட்டம்

6 Complainant /Informant (a) Name: குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: C.கலைமதி | (b) Father's/ Husband's Name: தந்தை / கணவர் பெயர்: திரு.செல்லையா

(c) Date / Year of Birth: நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality: நாட்டினம்: இந்தியன் | (e) Passport No.: வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue: வழங்கப்பட்ட நாள் 10.04.1968 | Place of Issue: வழங்கப்பட்ட இடம்

(f) Occupation: தொழில்: துணை ஆய்வுக்குழு அலுவலர் | (g) Address: முகவரி: மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம்

7 Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டுக்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவைப்படின் தனித்தாள் இணைக்கவும்)

திருமதி N.மாதவன் ராணி, சார் பதிவாளர் (பொறுப்பு), சார் பதிவாளர் அலுவலகம், கடையம், தென்காசி மாவட்டம்.

8 Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையிட்டவரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில தகவல் கொடுப்பதில தாமதம்

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10 Total value of properties stolen / involved
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11 Inquest Report / Un-natural death Case No. if any
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet, if required)
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. இன்று 13.06.2024ம் தேதி காலை சுமார் 02.00 மணிக்கு துணை காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தென்காசி M.பால் சுதர் ஆகிய நான் அலுவலக பொறுப்பில் இருக்கும்போது திருநெல்வேலி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.C.கலைமதி அவர்கள் நிலையம் ஆஜராகி ஒரு புகார் மனுவுடன் பணம் ரூ.1,59,000/-, செயல்முறை நடவடிக்கை நாள் 12.06.2024-ம் மற்றும் ஆவணங்கள் இணைத்து கொடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டி கொடுத்தார். அந்த மனு விபரம் பின்வருமாறு: அனுப்புநர் செ.கலைமதி, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டம், இருப்பு மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருநெல்வேலி. பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தென்காசி. அய்யா, பொருள்: தென்காசி மாவட்டம் கடையம் சார் பதிவக அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு செய்து கணக்கில் காட்டப்படாத பணம் ரூ.1,59,000/- கைப்பற்றியது தொடர்பாக. நேற்று 12.06.2024-ம் தேதி மாலை 14.00 மணியளவில் தென்காசி மாவட்டம் கடையம் சார்பதிவக அலுவலகத்தில்

13 Action taken: Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை: மேலே குற்ற முறைப்பீட்டின் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .................... பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost

மு.த.அ. குற்றமுறைப்பீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறைப்பீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

13/6/2024

15 Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

13.06.2024
04.00 Hrs.

Name பெயர் M.PAULSUTHER
Rank நிலை ....................No. எண் ..........
DSP. VAC. Tenkasi.

பணிபுரியும் அலுவலர்கள் லஞ்சம் பெற்றுக்கொண்டு ஆவணங்கள் பதிவு செய்வதாக கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் என்னுடைய தலைமையில் லஞ்ச ஒழிப்பு துறையினருடன் சேர்ந்து கடையம் சார்பதிவக அலுவலகத்தில் நேற்று 12.06.2024-ம் தேதி மாலை 18.40 மணி முதல் இரவு 23.30 மணி வரை திடீர் இணை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அப்போது மேற்படி அலுவலகத்தில் பொறுப்பு சார் பதிவாளர் திருமதி.N.பைரூஸ் ராணி என்பவரிடமிருந்து ரூ.39,000/-ம், சார்பதிவக கணினி அறையில் இருந்து ரூ.1,20,000/-ம் ஆக மொத்தம் பணமாக ரூ.1,59,000/- கைப்பற்றப்பட்டது. மேற்படி பணத்திற்கு அலுவலக பணியாளர்கள் மற்றும் தற்காலிக பணியாளர்கள் யாரும் தகுந்த முகாந்திரம் சொல்லாத காரணத்தினாலும், மேற்படி பணம் தனித்தனியாக இருந்தபடியாலும், மேற்படி பணம் பத்திரம் பதிவு செய்ய கையூட்டாக பெற்ற பணமாகவும் இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது. இது தொடர்பான செயல்முறை நடவடிக்கை நேற்று 12.06.2024-ம் தேதி மாலை 18.40 மணி முதல் இரவு 23.30 மணி வரை தயார் செய்யப்பட்டது. மேற்படி அலுவலகத்தில் இருந்த பொறுப்பு சார் பதிவாளர் திருமதி.N.பைரூஸ் ராணி மீது நடவடிக்கை எடுக்க வேண்டி கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,59,000/-, 12.06.2024-ம் தேதியிட்ட செயல்முறை நடவடிக்கை மற்றும் ஆவணங்களை தங்களிடம் ஒப்படைக்கிறேன். ஒம்.செ.கலைமதி, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி.

12.06.2024-ம் தேதி தென்காசி மாவட்டம் கடையம் வடக்கு ரதவீதியில் கதவு எண் 5-346ல் தெற்கு கடையத்தில் அமைந்துள்ள கடையம் சார்பதிவக அலுவலகத்தை திருநெல்வேலி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திருமதி.C.கலைமதி அவர்கள் தலைமையில் திடீர் சோதனை செய்தது சம்மந்தமான செயல்முறை நடவடிக்கைகள். முன்னிலை : 1) திருமதி.C.கலைமதி, திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் இருப்பு திருநெல்வேலி. 2) திரு.M.பால் சுதர், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தென்காசி. இன்று 12.06.2024-ம் தேதி பிற்பகல் 14.00 மணிக்கு கடையம் சார் பதிவக அலுவலக ஊழியர்கள் ஆவணங்கள் பதிவு செய்வதற்கு பணம் வசூல் செய்வதாக கிடைத்த இரகசிய தகவலின்படி திருநெல்வேலி துணை ஆய்வுக்குழு அலுவலர் திருமதி.C.கலைமதி அவர்கள் தலைமையில் தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.M.பால் சுதர், பெண் தலைமை காவலர் திருமதி.B.பிரவீனா மற்றும் காவலர்கள் சகிதம் தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் இருந்து மாலை சுமார் 17.30

மணியளவில் காவல் வாகனம் TN 22 G 0995-ல் புறப்பட்டு மத்தளம்பாறை, மாதாபுரம் வழியாக வந்து சுமார் 18.40 மணிக்கு கடையம் வடக்கு ரதவீதியில் அமைந்துள்ள அலுவலகத்தின் மெயின் கேட் வழியாக உள்ளே வந்ததும், அலுவலகத்திலிருந்து வெளியே செல்ல வேண்டி அலுவலக போர்டிகோவில் வந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திருமதி.N.பைசூல் ராணி என்பவரை விசாரணை செய்தபோது தான் சேரன்மகாதேவி மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிவதாகவும், கடையம் சார் பதிவாளர் பொறுப்பையும் கூடுதலாக கவனித்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் துணை காவல் கண்காணிப்பாளர் தன்னையும், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் தன்னையும், உடன் இருந்த சோதனை குழுவினரையும் அறிமுகம் செய்தும், தங்களை சுய பரிசோதனை செய்தும், பொறுப்பு சார் பதிவாளர் திருமதி.பைசூல் ராணி அவர்களை சார் பதிவக அலுவலகத்திற்குள் அழைத்து வந்து வாசலுக்கு நேர் எதிரே உள்ள அவரது இருக்கையில் அமர செய்துவிட்டு திருமதி.பைசூல் ராணி கையில் வைத்திருந்த சிமெண்ட் கலர் ரெக்சின் கைப்பையை சோதனை செய்தபோது அதில் "ROSHAN" என்று பொறிக்கப்பட்ட மூன்று சிப் கொண்டதாகவும், வெளிப்பக்கம் ஒரு சிப் கொண்டதாக இருந்தது. மேற்படி கைப்பையின் முதல் சிப்பில் (1) திருமதி.பைசூல் ராணி பெயரில் உள்ள பான் கார்டு எண் BQBPB2608B மற்றும் திருமதி.பைசூல் ராணி பெயரில் உதவியாளருக்கான அடையாள அட்டை சேரன்மகாதேவி மாவட்ட பதிவாளர் வழங்கியது ஆகியவை இருந்ததில், அடையாள அட்டை மட்டும் வழக்கின் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பான் கார்டு BQBPB2608Bஐ திருமதி.பைசூல் ராணியிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி கைப்பையின் நடு சிப்பில் இரண்டு காக்கி கவரில் பணம் இருந்தது. அதில் 'ம' என்று எழுதப்பட்ட ஒரு காக்கி கவரில் ரூ.5,000/- (500X10=5,000)மும், 'த' என்று எழுதப்பட்ட மற்றொரு காக்கி கவரில் ரூ.4,000/- (500X8=4,000)மும், கைப்பையின் வெளிப்பக்கம் உள்ள சிப் உள்ளதில் ரூ.600/-(100X5=500, 20X4=80, 10X2=20)ம் இருந்தது. மேற்படி பணத்தை தனிநபர் பணம் கையிருப்பு பதிவேட்டில் பார்த்தபோது திருமதி.பைசூல் ராணி சொந்தப்பணம் எதுவும் குறிப்பிடவில்லை. மேற்படி பணம் பற்றி திருமதி.பைசூல் ராணியிடம் கேட்டபோது அவர் ரூ.600/- தனது செலவுக்காக வைத்திருப்பதாக சொன்னதன்பேரில் மேற்படி பணம் ரூ.600/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இரண்டு காக்கி கவரில் இருந்த பணத்திற்கு தகுந்த முகாந்திரம் தெரிவிக்காததால் மேற்படி பணம் மேற்படியாருக்கு யாரும் லஞ்சமாக கொடுத்திருக்ககூடும் என கருதி மேற்படி பணம் ரூ.5,000/- மற்றும் ரூ.4,000/- மொத்தம் ரூ.9,000/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி காக்கி கவர்களில் 'த' மற்றும் 'ம' என்று எழுதியிருப்பதை குறித்து திருமதி.பைசூல் ராணியிடம் கேட்டபோது அவர் எந்தவித பதிலும் சொல்லாமல்

அமைதியாக இருந்தார். திருமதி.பைசூல் ராணி வைத்திருந்த "ROSHAN" என்று பொறிக்கப்பட்ட சாம்பல் நிற கறுப்பு கலர் பூ போட்ட சாப்பாடு (LUNCH BAG) பையை சோதனை செய்தபோது அதில் சாப்பாடு பாத்திரங்களுக்கிடையே கத்தையாக பணம் இருந்தது. அந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.30,000/- (500X60=30,000) இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் கேட்டபோது அவர் தகுந்த முகாந்திரம் கூறாததால் மேற்படி பணம் மேற்படியாருக்கு யாரும் லஞ்சமாக கொடுத்திருக்ககூடும் என கருதி ரூ.30,000/- கைப்பற்றப்பட்டது.

மேற்படி சார் பதிவாளரின் இருக்கைக்கு எதிரே வாசலுக்கு மேற்புறம் அமைந்துள்ள இருக்கையில் இருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திருமதி.S.சிவசங்கரி என்பவரை விசாரணை செய்தபோது அவர் தான் ஆவணங்களை ஸ்கேன் செய்து கொடுத்து வருவதாகவும், தனக்கு சார் பதிவாளர் திருமதி.பைசூல் ராணி அவர்கள் மாதம் ரூ.3,000/- சம்பளம் தருவதாகவும் தெரிவித்தார். அவரிடம் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொன்னபோது அவருடைய கைப்பையில் இருந்து ரூ.560/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணத்தை தனிநபர் பணம் கையிருப்பு பதிவேட்டில் பார்த்தபோது அவர் சொந்தப்பணம் எதுவும் குறிப்பிடவில்லை. மேற்படி பணம் பற்றி அவரிடம் கேட்டபோது அவர் தனது செலவுக்காக வைத்திருப்பதாக சொன்னதன்பேரில் மேற்படி பணம் ரூ.560/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பொறுப்பு சார் பதிவாளர் திருமதி.பைசூல் ராணியிடம் திருமதி.சிவசங்கரியை வேலைக்கு அமர்த்தியிருப்பது குறித்து கேட்டபோது, அவரும் திருமதி.சிவசங்கரிக்கு தான்தான் ரூ.3,000/- சம்பளம் கொடுத்து வேலைக்கு அமர்த்தியுள்ளதாக தெரிவித்தார்.

மேற்படி இருக்கைக்கு அருகில் இருந்து கொண்டிருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திரு.R.ஐயப்பன் என்பவரை விசாரணை செய்தபோது அவர் தான் கேமரா ஆபரேட்டராக இருப்பதாக தெரிவித்தார். அவரிடம் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொன்னபோது அவருடைய பர்சில் இருந்து ரூ.360/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணத்தை தனிநபர் பணம் கையிருப்பு பதிவேட்டில் பார்த்தபோது அவர் சொந்தப்பணம் எதுவும் குறிப்பிடவில்லை. மேற்படி பணம் பற்றி அவரிடம் கேட்டபோது அவர் தனது செலவுக்காக வைத்திருப்பதாக சொன்னதல்பேரில் மேற்படி பணம் ரூ.360/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

சார் பதிவாளரின் இருக்கைக்கு கீழ்புறத்தில் உள்ள இருக்கையில் அமர்ந்திருந்த இருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திருமதி.R.ராஜம்மாள் என்பவரை விசாரணை செய்தபோது அவர் தான் டேட்டா எண்ட்ரி ஆபரேட்டராக இருப்பதாக தெரிவித்தார். அவரிடம் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொன்னபோது அவருடைய பர்சில் இருந்து ரூ.2,770/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணத்தை தனிநபர் பணம் கையிருப்பு பதிவேட்டில் பார்த்தபோது அவர் சொந்தப்பணம் எதுவும் குறிப்பிடவில்லை. மேற்படி பணம் பற்றி அவரிடம் கேட்டபோது அவர் தனது செலவுக்காக வைத்திருப்பதாக சொன்னதன்பேரில் மேற்படி பணம் ரூ.2,770/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி சார் பதிவாளரின் அறைக்கு கிழக்கு பக்கத்தில் அமைந்துள்ள கணினி அறையின் வாசலுக்கு முன் வடக்கு பக்கத்தில் உள்ள இருக்கையில் யாரும் இல்லாததால் அது பற்றி பொறுப்பு சார் பதிவாளார் திருமதி.பைசூல் ராணியிடம் கேட்டபோது அவர் இளநிலை உதவியாளர் திருமதி.ராஜலட்சுமி பணிபுரிந்து வருவதாகவும், அவர் அலுவல் முடித்து மாலை 06.15 மணிக்கு சென்று விட்டதாக தெரிவித்தார்.

மேற்படி இருக்கைக்கு கீழ்புறம் கணினி அறை உள்ளது. மேற்படி கணினி அறையானது இரண்டு அறை கேபின்களாக பிரிக்கப்பட்டுள்ளது. வடக்கு பக்க கேபின் அறையில் வடக்கு பக்கத்தில் ஒரு இரும்பு பீரோ இருந்தது. மேற்படி இரும்பு பீரோவில் பழைய ஆவணங்கள் காணப்பட்டது. தென்புறம் உள்ள அறையின் கீழ்ப்பக்கத்தில் உள்ள இரும்பு பீரோவை சோதனை செய்தபோது அதில் கணினி சம்பந்தமான பொருட்களும், எழுது பொருட்களும் நிலுவை ஆவணங்களும் காணப்பட்டது. மேலும் ஒரு பிளாஸ்டிக் டப்பாவில் ரூ.250/- இருந்தது. மேற்படி பணம் குறித்து சார் பதிவாளர் திருமதி.பைசூல் ராணியிடம் விசாரித்தபோது அவர் மேற்படி பணம் நிரந்தர வைப்புத்தொகை என்று சொன்னதால் அந்த பணத்தை பதிவேட்டுடன் சரிபார்த்து மேற்படி பணம் ரூ.250/-ஐ திரும்ப திருமதி.பைசூல் ராணியிடம் ஒப்படைக்கப்பட்டது. மேற்படி அறையின் தென்பக்கத்தில் இரண்டு இரும்பு பீரோக்கள் இருந்தது. அதிலும் நிலுவை ஆவணங்களும், பழைய ஆவணங்களும் காணப்பட்டது. மேற்படி இரண்டு இரும்பு பீரோக்களுக்கு மேல்புறம் தென் மேற்கு மூலையில் பழுதடைந்த ஜெராக்ஸ் மெஷின் மேல் பழைய அட்டை பெட்டி மற்றும் ஆவணங்கள் இருந்ததை சோதனை செய்தபோது அந்த பெட்டிக்கடியில் "RMKV" என்று பொறிக்கப்பட்ட வெள்ளை நிற துணிப்பையில் மூன்று கத்தைகளாக பணம் இருந்தது. மேற்படி பணத்தை எடுத்து எண்ணிப்பார்த்த போது அதில் முதலாவது கத்தையில் ரூ.50,000/- (500X100=50,000)மும், இரண்டாவது கத்தையில் ரூ.50,000/- (500X100=50,000)மும்,

மூன்றாவது கத்தையில் ரூ.20,000/- (500X40=20,000)மும் மொத்தம் ரூ.1,20,000/- இருந்தது. மேற்படி பணம் பற்றி சார் பதிவாளர் திருமதி.பைசூல் ராணி மற்றும் பிற அலுவலர்களிடமும் கேட்டபோது யாரும் தகுந்த முகாந்திரம் கூறாததால் மேற்படி பணம் மேற்படியாளர்களுக்கு யாரும் லஞ்சமாக கொடுத்திருக்ககூடும் என கருதி ரூ.1,20,000/- கைப்பற்றப்பட்டது. எனவே மொத்த பணம் ரூ.1,59,000/-, "ROSHAN" என்று பொறிக்கப்பட்ட சிமெண்ட் கலர் ரெக்சின் கைப்பை ஒன்றும், "ROSHAN" என்று பொறிக்கப்பட்ட சாம்பல் நிற கறுப்பு கலர் பூ போட்ட சாப்பாடு (LUNCH BAG) பை ஒன்றும், "RMKV" என்று பொறிக்கப்பட்ட வெள்ளை நிற துணிப்பை ஒன்றும் வழக்கின் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

சார் பதிவாளரின் இருக்கைக்கு மேல்புறம் கழிப்பறை உள்ளது. அதனை ஒட்டி மாடிக்கு செல்லும் படிக்கட்டு உள்ளது. மாடியில் ஆவண அறை உள்ளதாக திருமதி.பைசூல் ராணி தெரிவித்தார். சார் பதிவாளர் திருமதி.பைசூல் ராணி ஆஜர் செய்த 1) தற்செயல் விடுப்பு பதிவேடு, 2) அலுவலக பணியாளர்கள் வருகை பதிவேடு 2024, 3) தனி நபர் இருப்பு பதிவேடு 01.01.2023 முதல், 4) இயக்கப் பதிவேடு 2023 முதல், 5) தற்காலிக பணியாளர்கள் வருகை பதிவேடு 2024, ஆகியவை வழக்கின் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. தனி நபர் இருப்பு பதிவேட்டை பார்வையிட்டபோது அதில் இன்று பணிக்கு வந்த எந்த அலுவலர்களும் தங்களது கையிருப்பு பணத்தை மேற்படி பதிவேட்டில் குறிப்பிடவில்லை.

சார் பதிவாளர் திருமதி.பைசூல் ராணியிடம் இன்று பதிவு செய்த ஆவணங்கள் மற்றும் இன்றைய கணக்கு குறித்து கேட்டபோது, அவர் கணினியில் இருந்து எடுத்த கணக்கு A, D, Sub Division, Section 41, CD fees, Tamilnadu Marriage ஆகிய தலைப்புகளில் ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டதாகவும், அதற்கு ஆன்லைன் மூலமாக A, D, Sub Division, Section 41, CD fees, Birth and Death, Document Writer welfare fund, Tamilnadu Marriage ஆகிய தலைப்புகளில் ஆன்லைனில் பணம் செலுத்தப்பட்டுள்ளதாகவும், கொடிநாளுக்கும் தற்போது ஆன்லைனில்தான் பணம் செலுத்தப்படுவதாகவும் தெரிவித்தார். மேற்படி ஆன்லைனில் ஆவணம் பதிவு செய்யப்பட்டதற்கான விபரங்களை (11 தாள்கள்) கணினியில் பிரிண்ட் எடுத்து வைத்திருந்ததை ஆஜர் செய்தார். அதை வழக்கின் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது இது குறித்து தயாரிக்கப்பட்ட இந்த செயல்முறை நடவடிக்கை இன்று 12.06.2024ம் தேதி இரவு 23.30 மணிக்கு முடிக்கப்பட்டது. ஒப்பம். C.கலைமதி, துணை ஆய்வுக்குழு

அலுவலர், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டம், இருப்பு திருநெல்வேலி, ஒம்.மற்றும் சிலர்.

Sir, Received the complaint on 13.06.2024 at 02.00 hrs and registered a case in Tenkasi V&AC, Cr.No.07/2024 u/s 7(a) of PC Act 1988 (as amended in) Act 16 of 2018 r/w 102 CrPC on 13.06.2024 at 02.30 hrs Sd.M.Paul Suther, 13.06.2024. DSP, V&AC, Tenkasi.

The original complaint, Proceedings of Deputy Inspection Cell Officer, Tirunelveli, Thoothukudi, Tenkasi and Kanyakumari District at Tirunelveli and original FIR were sent to the Hon'ble Special Judge for Trial of cases under the Prevention of Corruption Act, Tirunelveli and copies sent to concerned higher officials.

13/6/2024
M. PAULSUTHER,
DSP. V&AC,
Tenkasi.